DEPOSITION OF WITNESS

(Chapter XXIII code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, COIMBATORE.

Calendar }CC 38/2018
Preliminary Register } அ.சா. 1
Name } திருமதி. பவித்ரா
Father's name } த.பெ. செல்வராஜ்
Taluk
Village :
Calling :
Religion :
Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the day or
**Date**: 03-07-2019

**முதல் விசாரணை**

நான் 2015 ல் பிஎஸ்ஜி கலை அறிவியல் கல்லூரில் கபிஏ 2 ம் ஆண்டு படித்துக்கொண்டு கல்லூரி விடுதியில் தங்கியிருந்தேன். 10.07.2015 ல் பேஸ்புக் மூலமாக எனக்கு ஆஜர் எதிரி எனக்கு பழக்கம் ஆனார். பேசி பழக்கம் ஆகி காதல் அளிப்பதாக சொல்லி 12 நாட்கள் கழித்து சென்னையிலிருந்து என்னை பார்ப்பதற்காக கோவை வந்தார். என்னிடம் மதுரை கிச்சன் என்ற ஹோட்டலில் செப்பார இருப்பதாக சொன்னார். பேசி பழகும் போது அவரது அப்பா, அம்மா, அண்ணன் இறந்துவிட்டதாகவும், அவருக்கு யாரும் இல்லை என்றம் சொன்னதால் அனிதாபத்தில் அவரை காதலிக்க ஆரம்பித்தேன். சென்னையில் கட்டுமான பணி நடப்பதால் அங்கு வேலை இல்லை என்று கோவைக்கு வந்துவிட்டார். 3 நாட்கள் ஒன்றாக சுற்றினோம். இந்த விஷயம் விடுதி வாடனுக்கு தெரிந்து எனது பெற்றோரிடம் சொல்லிவிட்டார். என்னை கல்லூரி விடுதியில் இருந்து வெளியேற்றிவிட்டார்கள். வீட்டிலிருந்து கல்லூக்கு போய்கொண்டுவந்திருந்தேன். அப்போது கருமத்தப்பட்டியிலிருந்து அவருடன் வண்டியில கல்லூரிக்கு போய்வருவேன். அவர் வேலைப்பார்த்த ஹோட்டலில் அவர் தங்குவதற்கு ரூம் கொடுத்திருந்தார்கள். அங்கு சென்று தவறுகள் நடந்ததால் நான் கர்பமானேன். அக்டோபர் 12, 2015 ல் நாங்கள் திருமணம் செய்துகொண்டோம் ஆனால் எதிரி கோவையில் வேலை செய்து வருவதை நான் வீட்டில் சொல்லாமல் மறைத்ததால் 13 ம் தேதி திருமணம் நடந்ததாக வீட்டில் சொல்லியிருந்தேன். நான் என் பெ்றோரிடம் எதிரி வேலை பார்த்த ஊரான பெங்களூர் சென்று அங்கிருந்து வந்து 13 ம் தேதி திருமணம் செய்துகொண்டதாக சொல்லியிருந்தோம். திருமணம் முடிந்து சுமார் 3 மாதங்கள் என்னை அன்பாகதான் பார்த்துக்கொண்டார். அவரது அப்பா இறந்த செய்தியை என்னிடம் சொன்னபோதுதான் அவருக்கு அப்பா, அம்மா இருந்ததை தெரிந்துகொண்டேன். இதை என் வீட்டில் சொன்னால் தற்கொலை

செய்துகொள்வதாக மிரட்டினார். எதிரி சிறுவயதிலேயே வீட்டைவிட்டு வந்துவிட்டதால் எனது அப்பா எங்கள் வீட்டு முகரியில் இருந்து அவருக்கு வாக்காளர் அட்டை, ஓட்டினர் உரிமம் வாங்கிக்கொடுத்தார். நான் படித்துக்கொண்டிருந்ததால் குடும்பத்தினரிடம் நாங்கள் இருவரும் சேர்ந்து சம்மதித்து கருகலைப்பு செய்துகொண்டேன். சரவணம்பட்டியில் ஈட்டன் ஹோட்டலில் வேலை பார்த்து வந்தார். சொந்தமாக ஹோட்டல் வைக்க வேண்டும் என்று சொன்னாதால் சுண்ணாம்பு கால்வாய் என்ற இடத்தில் பவித்ரா ஹோட்டலை எனது அப்பா வைத்துக்கொடுத்தார். அவர் நெஞ்சில் தாரா என்றும் கையில் ஜெரி என்றும் பச்சை குத்தியிருப்பார். அதை கேட்டபோது தாரா எனது அம்மா, தாராலட்சுமி பெயர் என்றும் ஜெரி தன்னை காதலித்த பெண்ணின் பெயர் என்றும் சொன்னார். பின்னால் வீட்டில் இருந்த அவரது பாஸ்போட்டை ஒரு முறை பார்த்தபோதுதான் அந்த தாரா அவரது மனைவி என்று தெரியவந்தது. என்னை எனது அம்மாவிடமும் தோழியிடமும கூட போனில் அதிகம் பேச விடமாட்டார். வீட்டிற்கு அம்மா வந்தாலும் தனியாக பேசக்கூடாது என்று சொன்னார். நான் 2 வது முறையாக கர்ப்பமான போது அடிக்கடி ஹோட்டலில் இருந்து உணவு கொடுக்கசெல்லும் போது பழக்கம் ஏற்பட்ட பெண்ணிடம் அடிக்கடி பேசிவந்தார் இதை தெரிந்து நானும் என் அம்மாவும் கண்டித்தோம். நான் கர்ப்பமாக இருந்த காலத்தில் அதிக மன உளைச்சல் கொடுத்த எனக்கு உடல் நிலையில் குறைபாடு ஏற்படும் என்று எங்கள் அம்மா கோபிசெட்டிபாளையத்தில் உள்ள எங்கள் வீட்டிற்கு அழைத்துச்சென்றார். அவர் பல முறை எனக்கு மன உளைச்சல் கொடுத்தும எனது பெற்றோரிடம் சொல்லால் இருந்தேன். அடிக்கடி போன் செய்து என் அப்பாவிடம் காசு வாங்கித்தரும்படி சொன்னார். இல்லை என்றால் இனி மேல் உன்னுடன் பேசமாட்டேன் உன் போன் நெம்பரை லாக் செய்துவிடுவேன் என்ற சொன்னார். அதன் பிறகு தான் எனது பிரச்சனைகளை எனது பெற்றோரிடம் சொன்னேன். அதன் பிறகு சந்தேகம் ஏற்பட்டு எனது அப்பா, எனது மாமா சிவக்குமார், ரமேஷ் ஆகியோர் நாங்கள் குடியிருந்த வீட்டிற்கு சென்று வீட்டில் தேடிப்பார்த்தால்கள் அப்போது தான் பாஸ்போட் உள்ளிட்ட அசல் ஆவணங்கள் கிடைத்தது. இனிமேல் அவருடன் வாழமுடியாது என்று ஜூன் 9 ம் தேதி கமிஷனர் அலுவலகத்தில் அவர் மீது புகார் கொடுத்தோம். அந்த **புகார் அதசாஆ. 1.** அதன் பேரில் அவர் மீது நடவடிக்கை எடுத்து கைது செய்தார்கள். தொடர்ந்து எனது அப்பா, அம்மா போன்களுக்கு தொடர்பு கொண்டு எங்களை தொந்தரவு செய்கிறார். இவ்வழக்கை பதிவு செய்து பிறகு போலிஸ் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் கோபி செட்டிபாளயத்தில் உள்ள சாராதா மெட்ரிக்குலேஷன் பள்ளியில் படித்தேன். புகாரில் உள்ள முகவரி என் தந்தையின் வீட்டு முகவரி என்றால் சரி. புகாரை என் தந்தையிடம் கொடுத்து ஒப்டைத்தேன் என்றால் நானும் வந்திருந்தேன். நாங்கள் கொடுத்த

புகாரின் படி 8ம் தேதியே எதிரியை விசாரித்திருந்தால் அது தவறு. புகரில் கடந்த வருடம் ஜூலை 10 ம் தேதி என்று எழுதி அதனுடன் 2015ம் வருடம் என்று சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியதான். புகாரில் பெறுநர் முகரியில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஜூலை 10ம் தேதியீல் எதிரி எனது முகநூல் பக்கத்திற்கு குறுஞ்செய்தி அனுப்பினார் என்றால் சரி. எனது கைபேசி எண் அவருக்கு தெரியாது. அந்த கைபேசி எண்ணே அவருக்கு தெரியாத போது அவர் குறுஞ்செய்தி அனுப்பினார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது முகநூல் பக்கதிற்கு எதிரி குறுஞ்செய்தி அனுப்பினார் என்பதற்கு ஆவணங்களை நான் விசாரணையில் ஒப்படைக்கவில்லை. அனுதாபாத்தில் காதலிப்பதாக சொன்ன சமயத்தில் நாங்கள் நேராக பார்த்துக்கொண்டது கிடையாது. பேச ஆரம்பித்து 12ம் நாள் எந்த தேதியில் என்னை பார்க்க வந்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. 3 நாட்கள் ஒன்றாக சுற்றியபோதுதான் அவரை பார்த்திருக்கிறேன் என்றால் சரிதான். வீட்டிலிருந்து கல்லூரிக்கு சென்றுவந்த சமயத்தில் நான் தான் காயின் பாக்சீல் போன் செய்தேன் என்றால் சரி. வீட்டைவிட்டு வெளியே அவர் வேலை பார்த்த சரவணம்பட்டடி ஈட்டாம் ஹோட்டலுக்கு போனேன் எனறால் சரி. அந்த ஹோட்டலில் உரிமையாளர் மேலாளரும் எங்களுக்கு அறிவுரை கூறி அனுப்பி வைத்தார்கள் என்றால் சரி. நான் முதல் முதலில் எதிரி பிரேம் நாத்தை ஜூலை 22ம் தேதிதான் பார்த்தேன் என்றால் சரிதான். அவருடையஹோட்டல்அறைக்கு சென்ற தேதி ஞாபகம் இல்லை. அக்டோபர் 10ம் தேதி நாங்கள் திருமணம் செய்த மருதமலை முருகன் கோயிதானது இந்து சமய அறநிலை ஆட்சித்துறையின் கீழானது என்றால் சரி. அந்த கோவிலில் நடைபெறும் திருமணங்கள் அனைத்தும் அங்கு பதிவு செய்யப்பட்டு அரசால் அங்கிகரிக்கப்பட்டு சான்றிதழ் வழக்கப்பட்டுவது என்றால் சரி. திருமணத்தை உறுதி செய்யும் வகையில் கோயிலில் வழக்கப்பட்ட சான்றிதழ்களை நான் விசாரணையில் தாக்கல் செய்யவில்லை அவருக்கும் ஆதாரம் எதுவும் இல்லாததால் பதிவு செய்யப்படவில்லை. புகாரில் படிப்பு கருதி நானாக விருப்பு கருக்கலைப்பு செய்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரி. கோபிசெட்டிபாளயத்தில் வசந்த் மருத்துவமனையில் மருத்துவர் சந்திரிக்கா நடராஜிடம் கருக்கலைப்பு செய்தேன். அந்த சமயத்தில் 162 நாட்களுக்கு மேலாக வளர்ந்திருந்த கருவைத்தான் கருகலைப்பு செய்தேன். அந்த கருகலைப்பு 2015 அக்டோபர் இறுதியில் நடந்தது என்றால் சரிதான். எதிரி பிரேம் நாத்துடன் அவரது அறையின் இருந்தது ஆகஸ்ட் 2015 என்றால் சரி அதற்கு பிறகும் தொடர்பில் இருந்தோம். 2015ல் வலைதளங்களில் நான் எதிரி பிரேம்நாத்துடன் பேசியபோது எனது கைபேசி எனது தாயரின் கண்காணிப்பில் இருந்தது என்றால் சரியல்ல. பேஸ்புக்கில் வாட்ஆப்பிலும் பேசினால் எனது அம்மாவிற்கு தெரிவரும் என்பவதால் வீடியோ கால் டவுன்லோடு செய்யசொல்லி எனது நெம்பரை அனுப்பினேன் என்றால்

சரியல்ல. பள்ளி படிப்பை இருப்பாலரும் படிக்கும் பள்ளியில் தான் படித்தேன். என்னுடன் குருமூர்த்தி என்ற மானவரும் படித்தார் என்றால் சரி அவர் ஒரு வருடம் சீனியர். அவருக்கும் எனக்கும் இடையில் காவல் ஏற்பட்டு எங்கள் குடும்பத்தில் பெரிய பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரி. கோவையில் வடவள்ளியை சேர்ந்த பிரபு என்பவருடன் பழக்கம் ஏற்பட்டது என்றால் அவர் எனக்கு முகநூல் நண்பர் மட்டும் தான். நான் கோவையில் படித்து வரும் போது எனக்கு 21 ஆண் நண்பர்கள் இருந்தார்கள் என்றால் இல்லை. பிரபு என்ற நபருடன் நெருக்கமாக பழகி அதனால் விருப்பத்தாகாத சம்பவம்நடந்து இது பற்றி எனது தயார் பிரேம் நாத்திடம் கூறியிருக்கிறார் என்றால் சரியல்ல. நான் கர்பமானது தெரிந்து குடும்ப மானம் போகக்கூடாது என்று எனது தயார் பிரேம் நாத்திடம் எனது பெண்ணுக்கு பாதுகாப்பபா இருக்குமாறு கேட்டுக்கொண்டார் என்றால் சரியல்ல. இந்த பிரச்சனையை பேச கோபி செட்டிபாளையத்திற்கு போன போது பிரேம்நாத் தற்கொலை முயற்சி செய்ய போனில் தூக்கு மாட்ட சென்றார் என்றால் இல்லை. இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் நானும் எனது தயாரும் கொடுத்த நெருக்கடியில் அவர் தற்கொலை வரை சென்றுள்ளார் என்றால் சரியல்ல. புகாரில் போலிசார் விசாரித்த போது பதிவு செய்ததாக சொல்லபடும் வாக்குமூலத்திலும் எதிரியின் தயார் பெயர் தாராலட்சுமி என்று சொல்லப்படவில்லை என்றால் தாரா என்பதது தன் தயாரின் மறுபெயர் என்று சொன்னதாக குறிப்பிட்டு இருக்கிறேன். எதிரி என்னை போனில் அப்பா அம்மாவிடம் பேச விடமாட்டார் என்றம் அம்மாவிடம் தனியாக பேசவிடமாட்டார் என்றும் புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. காசு வாங்கி வரச்சொல்லி மிரட்டினார் என்ற நான் குறிப்பிடவில்லை என்றால் மிரட்டவில்லை நச்சரிப்பார். காவல் ஆணையாரிடமும் கோபிசெட்டிபாளையம் எல்லைக்கு உட்பட்ட மாவட்ட கண்காணிப்பாளரிடமும் கொடுத்ததாக சொல்லப்படும் புகார்களில் நீதிமன்றத்திலும் விசாரணையில் தாக்கல் செய்யவில்லை. சரவணம்பட்டி சுண்ணாம்பபு கால்வாய் பவித்ரா ஹோட்டலை நடத்தி வந்தது எதிரி என்றால் சரி. எனது தந்தை தனிப்பட்ட வகையில் புகைப்படம் எடுக்கும் தொழில் செய்து வந்தார். காவல் துறை சார்ப்பாக நிகழ்வுகளுக்கு எனது அப்பா புகைப்படம் எடுப்பார் என்றால் இல்லை. திருமணம் போன்ற விசேஷங்களுக்கு தான் எடுப்பார். படிக்கும் காலத்தில் இருந்தே நான் ஆண் நண்பர்களுடன் பழக்கம் இருப்பதால் எதிரி பிரேம்நாத் நண்பர் என்ற முறையில் அவரை என்னை பாதுகாப்பாக வைத்திருக்க சொன்னார்கள் என்றால் சரியல்ல. பிரேம் நாத்திற்கும் எனக்கும் நட்பு ரீதியான பந்தத்தை தவிர வேறு எதுவும் இல்லை என்றம் எனது நடவடிக்கைகளை எனது பெற்றோர் கண்டித்ததால் அவர் மீது புகார் கொடுத்து அவரை பலிகெடா ஆக்கியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது தந்தை கண்டிப்பானர் எனது தயார் என் மீது உள்ள பாசத்தால் எனது செய்லகளுக்கு ஆதரவு கொடுத்து வந்தார் என்றால்

சரியல்ல அம்மாவும் கண்டிப்பானவர்தான். ஆஜர் எதிரி எனது நலம் விருப்பு என்ற முறையில் மட்டுமே இருந்து வந்தார் என்றும் எங்களுக்கு வேறு உறவு முறை இல்லை என்றும் எனது குடும்பத்திடம் நகை, பணம் கேட்கவில்லை என்று சொன்னார் சரியல்ல. எனது நடவடிக்கை குறித்து எனது தயாரிடம் தெரிவித்து வந்தார் என்றும் எனக்கு தனிப்பட்ட முறையில் எதிரி எந்த தொல்லையும் கொடுக்வில்லை என்று சொன்னால் சரியல்ல. காவல்நிலையத்தில் புகார் கொடுத்த போது மதியம் 1 அல்லது 2 மணி இருக்கும். புகார் கொடுத்த அன்ற என்னை விசாரித்துவிட்டார்கள். 12 ம்தேதி ஒரு முறை விசாரித்தார்கள். அதன் பின்னிட்டு என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்யவில்லை. புகார் கொடுத்த அன்று என்னையும் எனது அப்பா, அப்பாவின் நண்பர்கள் சிவக்குமார், ரமேஷ், குமணன், வேலுமணி, ஆகியோர் வந்திருந்தார்கள் அவர்களை விசாரித்தார்கள். 12 ம் தேதி விசரித்த போது எங்களுடன் பெரியப்பா தேவராஜ், பொயப்பா சதாசிவம், பெரியப்பா மாரிமுத்து, அத்தை மரகதம், பெரியப்பா விஸ்வநாதன் ஆகியோர் வந்நிதருந்தார்கள். அன்று அவர்களையும் விசாரித்தார்கள். 2 நாள் விசாரணையோடு விசாரணை முடிந்தது என்றால் சரிதான். சரவணப்பட்டியில் வீடு வாடகைக்கு எடுத்து 12 ம் தேதி திருமணம் முடிந்த அன்றே தங்கினோம். மே 20 ம் தேதிவரை எனக்கு 18 ம் தேதி தேர்வுகள் முடிந்ததால் 20 ம் தேதிவரை இருந்துவிட்டு எனது அம்மாவுடன் சென்றுவிட்டேன்.

**குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது**.